


## InnerWheel Club

InnerWheel Club members from Adyar and other neighbouring clubs join together each year to do good to the environment and to the farmers through TIST Program. This year too they planted 2,000 trees through TIST farmers.

On 4th Febraury 2021, group of InnerWheel Club members visited Kilar Village at Kanchipuram District and planted 2,000 different tree species like teak, mahogany, redsanders, vengai, etc.

## இன்னர்வீல் கிளப்

TIST திட்டத்தின் மூலம் சுற்றுச்சூழலுக்கும் விவசாயிகளுக்கும் நன்மை செய்ய ஒவ்வொரு ஆண்டும் அடையார் மற்றும் பிற அண்டை கிளப்புகளைச் சேர்ந்த இன்னர்வீல் கிளப் உறுப்பினர்கள் ஒன்று சேர்கின்றனர். இந்த ஆண்டும் அவர்கள் TIST விவசாயிகள் மூலம் 2,000 மரங்களை நடவு செய்தனர்.

4 பிப்ரவரி 2021 இல், இன்னர்வீல் கிளப் உறுப்பினர்கள் குழு காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள கிலார் கிராமத்திற்குச் சென்று தேக்கு, மஹோகனி, சிவப்பு சந்தன மரம், வெங்கை போன்ற 2,000 வெவ்வேறு மர வகைகளை நடவு செய்தனர். கிராமங்களுக்கு அவர்கள் சென்றது விவசாயிகளுக்கு மிகவும் ஊக்கமளித்தது. அவர்கள் விவசாய நிலத்தில் அரை நாள் தங்கியிருந்து மரங்களை நட்டு, விவசாயிகள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி அறிந்து விவசாயிகளை பெரிதும் ஊக்குவித்தனர்.

**TIST Tree Planting India Pvt. Ltd**
Flat A, Plot 69, 26th Street, Sankar Nagar, Pammal, Chennai 600075.
Mobile : 9840299822
Email: josephrexontist@gmail.com
Skype: a.joseph.rexon
Web: www.tist.org

**The International Small Group & Tree Planting Program**

TIST - Planting Trees and Improving Agriculture for Better Lives
டிஸ்ட், மரங்களை நடவு செய்தல் மற்றும் சிறந்த வாழ்க்கைக்கு விவசாயத்தை மேம்படுத்துதல்





## Soil improvement

Trees and plants need good soil conditions if they are to give the good yield. Try to improve the soil with a lot of organic matter in the form of compost which helps drainage and aeration on hard soils and preserves moisture in it. Animal manures, green plant material, compost and mixture of shrub and tree leaves are especially good for improving soil condition. Tilt the soil and apply these organic materials and allow it to decay. Do not use materials which decay very slowly. Never use chemical fertilizers to improve your soil. The chemicals in the fertilizers will spoil your soil and during rainy season the chemicals flow through drainage to your neighbours land and their land soil will also get spoiled.

## Good yield from fruit trees

1. Trees should be healthy to produce good quality fruits
2. Keep the trees free from insects and diseases
3. Trees need good sunlight to produce good fruits
4. Give good spacing between each tree for the root system to grow well
5. Pruning is good, but lot of pruning will increase upright growth and decrease flower production and reduce yields

## மண்வளத்தை மேம்படுத்துதல

நல்ல மகசூல் கிடைக்க வேண்டும் என்றால் மரங்கள் மற்றும் செடிகளுக்கு நல்ல தரமான மண் இருக்க வேண்டும். இயற்கை உரமான மாட்டுச்சாணத்தை பயன்படுத்தி மண்வளத்தை கூட்ட முயற்சி செய்யுங்கள், இம்முறையில் கடினமான மண்வகைகளிலும் நீர் கசிவும் மற்றும் காற்றோட்டம் இருப்பதற்க்கு இயற்கை உரமானது உதவும். அதே நேரத்தில் மண்ணின் ஈரத்தன்மையும் காக்கும். விலங்குகளின் உரம், பச்சை செடிபொருட்கள், மண்புழு உரம் மற்றும் மரங்களின் காய்ந்த இலைகள் கொண்டு மண்ணின் தன்மையை கூட்டலாம். உழவு செய்து மண்ணை பிரட்டி அதன் மேல் எளிதில் மக்க கூடிய இயற்கை பொருட்களை போடுவது நல்ல ஒரு முறையாகும். எளிதில் மக்காத பொருட்களை பயன்படுத்த வேண்டாம். இராசாயண உரங்களையும் பயன்படுத்த வேண்டாம். இராசாயண உரத்தில் உள்ள இராசாயணம் உங்கள் நிலத்தில் உள்ள மண் வளத்தை அழித்துவிடும். மேலும் மழைக்காலங்களில் உங்கள் நிலத்தில் உள்ள இராசாயணப் பொருட்கள் தண்ணீர் கால்வாய் வழியாக அருகில் உள்ள உங்களது நண்பர்களின் நிலத்திற்கு சென்று அவர்களது நிலத்தில் உள்ள மண்வளத்தையும் அழித்துவிடும்.

## பழவகை மரங்களில் இருந்து நல்ல மகசூல்

1. மரங்கள் ஆரோகியமாக இருக்க வேண்டும் நல்ல கனி தருவதற்கு
2. மரங்களை நோய்கள் மற்றும் பூச்சிகள் இடம் இருந்து காப்பாற்றவும்
3. மரங்களுக்கு சூரிய ஒளி தேவை நல்ல கனி தருவதற்கு.
4. மரங்களை நல்ல இடைவெளி விட்டு நட்டால் மரத்தின் வேர்கள் நல்ல முறையில் வளர்வதற்க்கு இடம் உண்டு.
5. தேவையற்ற களைகளை அகற்றுவது நல்ல முறையாகும். அதே நேரத்தில் அளவுக்கு அதிகமான களைகளை அகற்றுவது மரத்தை மேல் நோக்கி வளர்வதற்கு வழிவகிக்கும், இதனால் பூ பூக்கும் தன்மை குறைந்து விடும், மகசூலும் குறையும்.



## தேக்கு மரங்களை சேதப்படுத்தும்



தேக்கு மரத்தை இலைப்புழு, இலை சுரண்டும் வண்டு, இலவ மர அத்துப்பூச்சி, பட்டைப் புழு, சாறு உறிஞ்சும் பூச்சிகள், மலர்கள் மற்றும் விதைகளைத் தாக்கும் பூச்சிகளும் தாக்கி கணிசமான அளவில் மரத்தின் பாதிக்கின்றன.

## இலைப்புழு

இலைப்புழுவின் பூச்சியியல் பெயர் ஹைபிளேயா பியூரா ஆகும். இந்தப் புழு அழுக்கடைந்த பச்சைநிற உடலில் மங்கலான கோடுகளுடன் காணப்படும். தாய்ப்பூச்சியின் தலை மற்றும் மார்புப் பகுதி செம்பழுப்பு நிறமாகவும், வயிற்றுப்பகுதி பழுப்புநிறத்தில் ஆரஞ்சுநிறக் கோடுகளுடனும் காணப்படும். முன்னிறகுகள் செம்பழுப்புநிறத்திலும், பின்னிறகுகள் பழுப்புநிறத்தில் ஆரஞ்சுநிற ஓரங்களுடனும் இருக்கும். புழுக்களால் முதிர்ந்த இலைகள் சல்லடை போல் அரித்துத் தின்னப்பட்டிருக்கும்.

## இலை அரிப்பான்

இலை அரிப்பானின் பூச்சியியல் பெயர் ஹபாலியா மேச்சராலிஸ் ஆகும். இப்புழுவின் பச்சைநிற உடலில் நீளவாக்கில் பழுப்புநிறக் கோடுகள் இருக்கும். தாய்ப்பூச்சியின் மஞ்சள்நிற இறக்கையில் இளஞ்சிவப்பு நிறக்கோடுகள் காணப்படும்.

## இலைச்சுருட்டுப் புழு

இலைச்சுருட்டுப் புழுவின் பூச்சியியல் பெயர் சைலப்டாஸ்ராமினியா ஆகும். இது இலைகளைச் சுருட்டி, அதனுள் இருந்து கொண்டு பச்சையத்தை சுரண்டித் தின்னும்.

உங்கள் தேக்கு தோப்புகளில் இதுபோன்ற பூச்சிகளை நீங்கள் கவனிக்க நேர்ந்தால், உடனடியாக உங்கள் ஒருங்கிணைப்பாளரைத் தொடர்புகொண்டு

பூச்சிகலை அகற்ற முறைகளை தெரிந்துகொல்லுங்கல்